# பிரம்ம சூத்திரம் - ‘சதுஸ்ஸூத்ரி’

**செ.தவமணி**
முனைவர் பட்ட ஆய்வாளர், விஷன் பார் விஸ்டம், ஆழியார்

**முனைவர் பூங்குன்றன்**
முதல்வர், மதர் தெரஸா கலை அறிவியல் கல்லூரி, இலுப்பூர், புதுக்கோட்டை

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

மேலைநாடு விஞ்ஞானத்தில் தற்போது மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது. ஆனால் நம் இந்திய நாடு மெய்ஞ்ஞானத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உயர்ந்திருந்தது. மனித மனத்தால் எட்டக்கூடிய உச்சத்தை நம் நாட்டு ரிசிகளும் ஞானிகளும் எட்டியிருந்தனர். அவர்கள் உள்ளுணர்வால் பெற்ற உண்மைகள் அடங்கியதே வேதங்கள். வேதங்களில் உள்ளவற்றை கண்டு அறியும் வழிமுறைகளே தரிசனங்கள் எனப்படுகின்றன. சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சம் மற்றும் வேதாந்தம் என்ற ஆறும் ஆத்திக தரிசனங்கள் எனப்படுகின்றன. இவற்றுள் மீமாம்சத்திற்கும் வேதாந்தத்திற்குமிடையில் தொடர்பு உண்டு. மீமாம்சம் என்றால் ஆராய்தல் என்பது பொருள். மீமாம்சம் வேதங்களிலுள்ள கர்ம மற்றும் உபாசன காண்டம் குறித்து ஆராய்கிறது. வேதாந்தம் ஞான காண்டத்தை ஆராய்கிறது. எனவே மீமாம்சம் பூர்வ மீமாம்சம் என்றும் வேதாந்தம் உத்தர மீமாம்சம் என்றும் அழைக்கப்படுகிறது. வேதாந்தக் கருத்துக்களை நிரூபிப்பதற்காக எழுந்ததே பிரம்ம சூத்திரமாகும்.

## பிரம்ம சூத்திரம்

இது வடமொழியில் பாதராயண வியாசரால் எழுதப்பட்ட நூல். இதில் மொத்தம் 555 (எண்ணிக்கையில் விளக்கவுரை ஆசிரியர்களுக்குள் வேறுபாடு உள்ளது) சூத்திரங்கள் உள்ளன. தமிழில் விளக்கி எழுதப்பட்ட முதல் நூல் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தால் 2013ல் வெளியிடப்பட்டது. இதுவே ஆய்வுக்கு முதன்மை நூல். இதில் சூத்திரங்கள் சமஸ்கிருத வடிவத்திலும் தமிழ் வடிவத்திலும் உள்ளன. சூத்திரம் என்பது சிறிய அதே வேளையில் ஆழமான பொருளையுடைய வாக்கியமாகும். இந்நூலுக்கு பல விளக்கவுரைகள் பல ஆச்சாரியர்களால் எழுதப்பட்டுள்ளன. சங்கரர், ராமானுஜர், மத்வர் ஆகிய மூவரும் எழுதிய விளக்கவுரைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய வேதாந்த உட்பிரிவுகள் முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், மற்றும் துவைதம் ஆகும். பிரம்ம சூத்திரத்திலுள்ள முதல் நான்கு சூத்திரங்கள் மட்டுமே ஆய்வு செய்யப்படுகின்றன.

## நூலமைப்பு

பிரம்ம சூத்திரத்தில் நான்கு அத்தியாயங்கள் உள்ளன. ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு நான்கு பாதங்களாகப் (பகுதிகள்) பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அதிகரணங்களும் (தலைப்புகள்)

பல சூத்திரங்களும் உள்ளன. நூலமைப்பின் சுருக்கம்:

| அத்தியாயம் | பாதம் | அதிகரணம் | ஸூத்ரம் |
|---|---|---|---|
| 1. ஸமன்வய அத்தியாயம் (இறைவன் தம்மிலிருந்தே உலகைப் படைத்தார்) | 4 | 67 | 237 |
| 2. அவிரோத அத்தியாயம் (மாற்றுக் கருத்துக்கள் தவறு) | 4 | 46 | 157 |
| 3. ஸாதானா அத்தியாயம் (ஆன்மீக சாதனைகள்) | 4 | 67 | 186 |
| 4. ∴பல அத்தியாயம (பலன்கள்) | 4 | 38 | 78 |
| மொத்தம் | 16 | 218 | 658 |

'அதிகரணங்கள் மற்றும் ஸூத்ரங்களின் எண்ணிக்கை ஆச்சாரியருக்கு ஆச்சாரியர் மாறுபடுகிறது.

| | | |
|---|---|---|
| ஸ்ரீசங்கரர்: | 192 அதிகரணங்கள் | 555 ஸூத்ரங்கள் |
| ஸ்ரீராமானுஜர் | 155 அதிகரணங்கள் | 545 ஸூத்ரங்கள் |
| ஸ்ரீமத்வர் | 222 223 அதிகரணங்கள் | 564 ஸூத்ரங்கள் |

சில ஸூத்ரங்களைப் பிரித்து இரண்டாகக் காண்பதும் சில இடங்களில் இரண்டு ஸூத்ரங்களை இணைத்து ஒன்றாகக் காண்பதும் இந்த எண்ணிக்கை வேறுபாட்டிற்குக் காரணம் ஆகும்.'[1]

## நான்கு சூத்திரங்கள் மட்டும் ஏன்?

பிரம்ம சூத்திரத்திலுள்ள அனைத்து சூத்திரங்களையும் இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். முதல் நான்கு சூத்திரங்கள் ஒரு பிரிவாகவும், ஏனைய அனைத்து சூத்திரங்களையும் மற்றொரு பிரிவாகவும் பிரிக்கலாம். முதல் நான்கு சூத்திரங்களுக்குள் அனைத்து வேதாந்தக் கருத்துக்களும் அடங்கிவிடும். எனவே அவை சிறப்பாக 'சதுஸ்ஸூத்ரி' என அழைக்கப்படுகிறது. இந்த நான்கு சூத்திரங்களும் சொல்லும் செய்தி என்ன என்பதை மிகச் சுருக்கமாகக் காண்போம்.

1. முதல் சூத்திரம் பிரம்மத்தைப் பற்றிய விசாரம் தேவையா? தேவையில்லையா? என்பதைத் தெரிவிக்கிறது.
2. இரண்டாவது சூத்திரம் பிரம்ம லட்சணத்தைப் பற்றிக் கூறுகிறது.
3. மூன்றாவது சூத்திரம் பிரம்ம லட்சணம் எந்த பிரமாணத்தின் அடிப்படையில் பெறப்பட்டது என்பதை தெரிவிக்கிறது.
4. நான்காவது சூத்திரம் பிரம்ம விசாரம் என்பதன் மூலம் உபநிடதங்களில் ஊடுருவி இருப்பது பிரம்மமே என்று நிலை நாட்டப்படுகிறது.

## முதல் சூத்திரம்

'அத அத: பிரம்ம ஜிஜ்ஞாஸா' என்பது முதல் சூத்திரமாகும். இதன் பொருள் 'பிறகு, எனவே கடவுளைத் தேடுவோம்'. இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் மிகுந்த பொருள் பொதிந்தவை. பிறகு என்று சொல்லும்போது இதற்கு முந்தைய ஒன்றை அது சுட்டிக் காட்டுகிறது. ஏதோ ஒன்றின் நிறைவிற்குப் பிறகு என்பதை உணர்த்துகிறது. அந்த ஏதோ ஒன்று என்பது உலகமும் அதன் இன்பங்களும் சுகபோகங்களும்தான். உலக இன்பங்களிலும் சுகபோகங்களிலும் மனிதனுக்கு ஒரு நிறைவு வந்தபிறகு அல்லது சலிப்பு வந்தபிறகு அவனுக்கு இறைவனைத் தேட வேண்டும் என்ற

மன ஏக்கம் ஏற்படும். 'பிரம்ம சூத்திரத்தின் முதலாவது சூத்திரத்திலுள்ள அடுத்த வார்த்தை (அத:) 'எனவே' என்பதாகும். கடவுளை எதற்காகத் தேட வேண்டும் என்பதற்கான பொருளை உணர்த்துவதற்கான சொல்லே 'எனவே' என்பதாகும். கடவுளை எதற்காகத் தேட வேண்டும்? இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று உலக இன்பங்கள் நிலையற்றவை என்பதைப் புரிந்து கொண்டதால் என்பது. இரண்டாவது நிலையான இன்பம் வேண்டும் என்பதால் என்பது'[2] 'பிரம்ம ஜிஜ்ஞாஸா' என்றால் கடவுளைத் தேடுவோம் என்பது பொருள். பிரம்ம விசாரணை தேவை என முதல் சூத்திரத்தின் மூலம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

### இரண்டாவது சூத்திரம்

'ஜன்மாதி அஸய அத:' என்பது இரண்டாவது சூத்திரமாகும். இதன் பொருள் 'படைப்பு முதலியவை எதனிடமிருந்து தோன்றியதோ அதுவே பிரம்மம் என்பது.' முதலாவது சூத்திரத்தில் மோட்சம் அடைய விரும்புபவர்களால் பிரம்மம் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டு விட்டதால், இரண்டாவது சூத்திரத்தில் பிரம்மத்தைப் பற்றிய லட்சணம் (அடையாளம்) கூறப்பட்டிருக்கிறது. இதில் தடஸ்த லட்சணத்தின் (படிப்படியாகத் தெரிந்து கொள்ளும் விதம்) வாயிலாக அடையாளம் சொல்லப்பட்டிருக்கிறது. 'படைப்பு முதலியவை' என்பதற்கு பல்வேறு கோணங்களில் படைப்பு பற்றி விளக்கவுரை ஆசிரியர்களால் விளக்கப்பட்டுள்ளது. காரண காரிய வாதம், நிமித்த, உபாதான காரண வாதம் போன்றவை சில. 'இறைவன் உலகைப் படைத்தார் என்னும் போது அவர் இந்த உலகிற்கு நிமித்த காரணமாகவும் உபாதான காரணமாகவும் இருக்கிறார்.'[3] இதற்கு சிலந்திவலை உதாரணமாகக் கூறப்பட்டுள்ளது. இறைவன் அனைத்தும் அறிந்தவர் என்பதும், பேராற்றல் மிக்கவர் என்பதும் இந்தச் சூத்திரத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### படைப்புக் கொள்கை

படைப்பு பற்றி இந்தியத் தத்துவங்ளில் மூன்று முக்கியக் கருத்துக்களைக் காணலாம். அவை:

1. காரியமாகிய இந்த உலகம் படைப்பிற்கு முன்னால் காரணத்தில் இருந்தது. அதாவது உலகம் புதிதாகப் படைக்கப்பட்டது அல்ல. ஏற்கனவே இருந்தது வெளிப்பட்டது அவ்வளவுதான். காரியம் காரணத்தில் இருந்தது. களிமண்ணிலிருந்து குயவன் பானை செய்கிறான். செய்யப்படுவதற்கு முன்னால் பானை எங்கே இருந்தது? களிமண்ணில்தான். அதுபோலவே இறைவன் உலகைப் படைத்துள்ளார். இந்த உலகம் அவருள் ஏற்கனவே இருந்தது. அதன்படி காரணத்தில் இருக்கின்ற பண்புகள் அப்படியே காரியத்திலும் வெளிப்படுகின்றன. எப்படி பால் தயிராகிறதோ அப்படியே இறைவனும் உலகமாக மாறுகிறார் என்பது பரிணாம வாதம். விவர்த்த வாதம்: கயிற்றில் பாம்பு தெரிவதுபோல் இந்த உலகம் ஒரு தோற்றம் மட்டுமே. உண்மையில் உலகம் என்ற ஒன்று கிடையாது. உணர்வுப் பொருளான இறைவனே காரணப்பொருள். அவரே உலகமாகப் பரிணமிக்கிறார். ஆனால் இந்தப் பரிணாமம் உண்மை அல்ல. இருளில் கிடக்கின்ற கயிறு பாம்பாகத் தென்படுகிறது. ஆனால் ஒளி வந்ததும் மறைந்துவிடுகிறது. அதுபோலவே இந்தப் படைப்பும் வெறுமனே தோன்றுவது மட்டுமே. ஞானம் வரும்போது படைப்பு மறைந்துவிடுகிறது. இது விவர்த்த வாதம்.
2. காரியமாகிய இந்த உலகம் படைப்பிற்கு முன்னால் இருக்கவில்லை. பரமாணு எனப்படும் மூலகாரணமாகிய அணுக்கள் ஒன்றுசேர்ந்து இந்த உலகம் உருவாகியுள்ளது. இதன்படி காரணத்தில் இருக்கின்ற பண்புகள் அப்படியே காரியத்தில் வெளிப்படுவதில்லை. காரணப் பண்புகள் தங்களைப்போன்ற புதிய பண்புகளை காரியத்தில் உருவாக்குகின்றன. இப்படி படைப்பு என்பது ஓர் ஆரம்பமாக இருப்பதால் இது ஆரம்பவாதம் எனப்படுகிறது.
3. காரணம் என்ற ஒன்றே கிடையாது. பல்வேறு ஜடப்பொருட்கள் சேர்ந்து உலகம் தோன்றியது. இது ஸங்காத வாதம் அல்லது ஸமுதாயவாதம் என்றும் கூறப்படுகிறது. மாறுவதாகிய பரிணாமக் கருத்தையும் புதிய படைப்பாகிய ஆரம்பவாதத்தையும் இது மறுக்கிறது.'[4]

**மூன்றாவது சூத்திரம்**

‘சாஸ்த்ர யோனித்வாத்’ என்பது மூன்றாவது சூத்திரமாகும். இதன் பொருள் ‘சாஸ்திரங்களின் வாயிலாக.’ சாஸ்திரம் யோனி என்பது இலக்கண அடிப்படையில் இரண்டு விதமாகப் பொருள் கொள்ளப்படுகிறது. யாரை சாஸ்த்திரங்களால் மட்டுமே அறிந்து கொள்ள முடியுமோ அவரே பிரம்மம் என்பது முதல் பொருள். சாஸ்திரங்களுக்குக் காரணமானவர் யாரோ அவரே பிரம்மம் என்பது இரண்டாவது பொருள். முதல் பொருளில் பிரமாணமும் (அறிவு வரும் வழி), இரண்டாவது பொருளில் காரணமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இறைவன் இருப்பதற்குக் நிரூபணம் சாஸ்திரங்களே என்று இந்த மூன்றாவது சூத்திரம் நிலைநாட்டுகிறது. ‘சாஸத்ரம் யோனி’ என்பதற்கு பிரமாணம் என்ற பொருளின்படி முதலில் விளக்கம் காண்போம். பிரம்மம் சாஸ்திரத்தின் மூலமாக அறியப்படுபவர். அதாவது பிரம்மத்தை சாஸ்திரம் என்ற பிரமாணத்தின் மூலம்தான் அறிய முடியும். பிரம்மத்தை அறிவிக்கும் கருவி சாஸ்திரம். கடவுள் இல்லை என்பவர்களுக்கான பதில் என்று சொல்லலாம். இது கடவுளை கண்ணால் கண்டால்தான் (பிரத்தியட்ச பிரமாணம்) நம்புவேன் என்பவர்களுக்கான பதில் இதுவாக இருக்கிறது எனலாம்.

‘சாஸ்த்ர யோனித்வாத்’ என்பதற்கு சாஸ்திரத்திற்குக் கர்த்தாவானவர் (காரணமான) பிரம்மன் என்ற பொருளில் விளக்கங்கள் காண்போம். இரண்டாவது சூத்திரத்தில் இந்த உலகம் எதனிடமிருந்து தோன்றியதோ அது பிரம்மம் என்று சொல்லப்பட்டது. சிருஷ்டி கர்த்தா பிரம்மமே என்பது கருத்து. பிரம்மன் இல்லாத உலகத்தைப் படைக்கவில்லை, ஏற்கனவே இருந்த (ஒடுங்கி இருந்த) உலகத்தை வெளிப்படுத்தினார். அதுபோல் ஏற்கனவே இருந்த சாஸ்திரத்தை பிரம்மன் வெளிப்படுத்தினார். ஜெகத்கர்த்தாவும் அவரே, வேதகர்த்தாவும் அவரே. வெளிப்படுத்துவது சிருஷ்டி. வைத்திருப்பது ஸ்திதி. தனக்குள் எடுத்துக் கொள்வது லயம். எனவே ஈஸ்வரன் சிரு‘டிக்கிறார் என்றால் ஏற்கனவே இருந்ததை வெளிப்படுத்தினார் என்று பொருள். உலகத்தையும் வேதத்தையும் அவரே இவ்விதமாக வெளிப்படுத்தினார்.

**நான்காவது சூத்திரம்**

‘தத் து ஸமன்வயாத்’ என்பது நான்காவது சூத்திரம். இதன் பொருள் சாஸ்திரங்களைச் சமன்படுத்திப் புரிந்து கொள்வதன் மூலம் பிரம்மம் பற்றிய அறிவைப் பெறலாம். இங்கு ‘து’ என்பதற்கு ‘ஏவ’ அதாவது பிரம்மம் மட்டுமே என்றும், ‘பூர்வபட்ச நிவாகரணம்’ (ஆட்சேபங்கள் நீக்கம்) என்றும் இரண்டு பொருள்கள் உள்ளன. உபநிடதங்களில் பிரம்மம் மட்டுமே பேசப்பட்டுள்ளது. மற்ற கருத்துக்கள் எல்லாம் அந்த பிரம்மத்தை விளக்குவதற்காகவே உள்ளன. இதை மறுக்கக் கூடிய ‘பூர்வபட்சி’களின் ஆட்சேபங்கள் நீக்கம் செய்யப்படுகின்றன. உபநிடதக் கருத்துக்களைச் சமன்படுத்திப் புரிந்து கொள்ளவேண்டும் என்பது இந்த நான்காவது சூத்திரத்தின் பொருளாகும்.

பிரம்ம சூத்திரம் நியாய ப்ரஸ்தானம் என்று அழைக்கப்படுவது. அதாவது உபநிடத வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு சூத்திரத்தின் மூலம் விளக்குவதாகும். உபநிடதங்கள் முழுவதிலும் பிரம்மம்தான் தாத்பரியமாக அதாவது மையக்கருத்தாக இருப்பதைக் காணலாம். பிரம்மத்தைப் போதிக்கிற வி‘யத்தில் உபநிடதங்கள் முழுவதிலும் ஒரு கொள்கை மாறாத் தன்மை (consistency or uniformity) இருப்பதைக் காணலாம். இதைத்தான் ‘சமன்வயம்’ என்று சொல்வார்கள். பிரம்மத்தைப் பற்றிய வி‘யங்களில் ஒத்துப்போகிற தன்மையும், முரண்பாடுகள் இல்லாத தன்மையையும் உபநிடதங்களில் நாம் காணலாம். இந்த சமன்வயப்படுத்துதலை பாதராயணார் நான்காவது சூத்திரத்தில் ஆரம்பித்து கடைசி சூத்திரம்வரை செய்திருக்கிறார்.

நிறைவுரை

பிரம்ம சூத்திரத்திலுள்ள முதல் நான்கு சூத்திரங்கள் சிறப்பாக ‘சதுஸ்ஸுூத்ரி’ என அழைக்கப்படுகிறது. உலக இன்பங்களிலும் சுகபோகங்களிலும் மனிதனுக்கு ஒரு நிறைவு வந்தபிறகு

அல்லது சலிப்பு வந்தபிறகு அவனுக்கு இறைவனைத் தேட வேண்டும் என்ற மன ஏக்கம் ஏற்படும். உலக இன்பங்கள் நிலையற்றவை என்பதைப் புரிந்து கொண்டதாலும், நிலையான இன்பம் வேண்டும் என்பதாலும் பிரம்ம விசாரணை தேவை என முதல் சூத்திரத்தின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டது. எனவே பிரம்மத்தைப் பற்றிய லட்சணம் (அடையாளம்) இரண்டாவது சூத்திரத்தில் சொல்லப்பட்டது. இந்த சூத்திரத்தின் அடிப்படையில் படைப்புப் பற்றிய தத்துவங்களை விளக்கவுரை ஆசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். மூன்றுவிதமான படைப்புக் கொள்கைகளை விளக்கவுரை ஆசிரியர்கள் முன்வைக்கின்றனர். பிரம்மத்தின் அடையாளம் எந்த பிரமாணத்தின் அடிப்படையில் எட்டப்பட்டது என்பது மூன்றாவது சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. சாஸ்திரங்கள் என்ற பிரமாணத்தின் மூலம் பிரம்மம் இதுதான் என்று நிலைநாட்டப்பட்டிருக்கிறது. பிரம்மம்தான் உபநிடதங்களில் பேசப்பட்டிருக்கிறது. பிரம்மம் தவிர பிற கருத்துக்கள் இந்த முக்கிய கருத்தை வலுச் சேர்ப்பதற்காகத்தான் உள்ளன. எனவே சாஸ்திரங்களை சமன்படுத்திப் புரிந்துகொள்ளவேண்டும் என்பது நான்காவது சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த விளக்கங்கள் ஒருவருக்கு பிரம்மத்தைப் பற்றிய தெளிவைத்தரும். அதனால் மக்கள் இறையுணர்வுடனும் அறநெறியுடனும் வாழ்வார்கள். சமுதாயத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

**துணைநூற்பட்டியல்**

1. பிரம்மசூத்திரம் வேதாந்த தத்துவத்தின் ஓர் அடிப்படைநூல் விளக்கியவர் சுவாமி ஆசுதோசானந்தர் ஸ்ரீராமகிருஷ்ண மடம் சென்னை 2013 பக்கம் xxvii
2. ‘பிரம்ம ஸூத்ரம்’ விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர் ஸ்ரீராமகிருஷ்ண மடம் சென்னை 2013 பக்கம் 10
3. முண்டக உபநிடதம் 1. 1. 7
4. பிரம்ம ஸூத்ரம் விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர் ஸ்ரீராமகிருஷ்ண மடம் சென்னை 2013 பக்கம் 823-825